# விடை தேடும் வினாக்கள்



பரதன்

www.saivamonline.com

முனைவர். இரா. செல்வக்கணபதி

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

G Pay +91 94440 21113

+91 94440 21113

UPI 9444021113@UPI




# 5. பரதன்

உலகில் படைக்கப்பட்ட எல்லாக் காப்பியங்களும் உயரியன என்று கூற இயலாது. கால வெள்ளத்தைக் கடந்து உயிர்வாழ்வன சில. கால வெள்ளத்தில் கரைந்து அழிந்தன பல.

என்றும் மாறா மனித குலப் பண்புகளோடு உறவாடி, அவர்தம் விருப்பு வெறுப்புகளுக்கு ஈடு கொடுத்துக் காப்பியங்கள் நின்று நிலவ அவற்றிற்கு இரண்டு கூறுகள் இன்றியமையாதன.

ஒன்று; மானுடம் தழுவிய கதைக்கரு.
இரண்டாவது படைப்பாளியின் ஆளுமை.

இவ்விரு கூறுகளும் பெற்று நின்று நிலவும் இந்தியப் பெருங்காப்பியங்களுள் தலையாய ஒன்று கம்பனின் இராமகாதை.

கதைக்கரு வான்மிகம் தந்தது.

மானுடப் பண்புகளுக்கு உயிரூட்டி, மண்ணின் மரபுகளோடு அதனைப் பட்டை தீட்டியவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

கம்பனை அறிந்த பலரும், அவனை ஒரு கற்பனைக் கவிஞனாகவே கண்டு போற்றினார். இப்போற்றுதல், கவிஞனை முழுமையாக, மதிப்பிட்டுரைப்பதாக அமையவில்லை.


www.saivamonline.com

கற்பனைப் புனைவுகள் மட்டும் ஒரு கவிஞனுக்கு வாழ்வளித்துவிட முடியாது. கம்பனின் வாழ்வுக்கு இதனினும் மேலான ஓர் ஆற்றல் அடிப்படை என்பதனைக் கண்டு தெளிய கூரிய ஆற்றல் வேண்டும்.

கம்பனை வாழவைக்கும் அவ்வரிய ஆற்றல் எது?
அவனது மானுடப்புனைவுகள்.

''கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்'' என்ற பாரதியின் மதிப்பீடு ஆழமானது.

கம்பன் என்றொரு கவிஞன் என்றோ, புலவன் என்றோ, அறிஞன் என்றோ கூறாது ''மானுடன்'' என்று மதிப்பிட்டுரைத்தது நுட்பம் நிறைந்தது.

---

**என்றும் மாறாமனித குலப் பண்புகளோடு உறவாடி, அவர்தம் விருப்பு வெறுப்புகளுக்கு ஈடுகொடுத்துக் காப்பியங்கள் நின்று நிலவ அவற்றிற்கு இரண்டு கூறுகள் இன்றியமையாதன.**

**ஒன்று மானுடம் தழுவிய கதைக்கரு.**
**இரண்டாவது படைப்பாளியின் ஆளுமை.**

**இவ்விரு கூறுகளும் பெற்று நின்று நிலவும் இந்தியப் பெருங்காப்பியங்களுள் தலையாய ஒன்று கம்பனின் இராம காதை.**

---

'அவன் மானுடன்' என்பது அன்று பாரதியின் உள்ளம்;
மானுடத்தை மதிப்பிட்டுப் புனைந்த மானுடன் கம்பன்
என்பது பாரதியின் உள்ளம்.

கம்பனின் மானுடப்புனைவைப் ''பரதன்'' என்ற பாத்திரப் படைப்பில் முழுமையாக இனம் காண இயலும்.

மனித வாழ்க்கை சிக்கலானது



www.saivamonline.com

"புகழ் எனின் உயிரும் கொடுப்பர் பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்"

என்பான் சங்கநூற் புலவன்.

இல்வாழ்வின் நிறைவு புகழில் தங்குகிறது. இது வள்ளுவனின் மதிப்பீடு.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே.

என்பான் புறநானூற்றுப் புலவன். புகழ்பட வாழ முயல்வார் பலர். வாழ்ந்து மக்கள் நெஞ்சில் நிறைவார் சிலர்.

வேறுசிலர் வாழ்வு அவலமானது. புகழ் நோக்கிய அன்னார் பயணம் தொடங்கும் முன்பே, பழி அவர்களைச் சூழ்ந்து

---

**அரசகுலத்தில் பிறந்த, தன் மிகுந்த அன்புக்குரிய மனைவியிடம் ஆசைக்குரிய தன் அன்பு மகன் இராமன் வளர வேண்டும் என்று தசரதன் போட்ட கணக்கில்தான் பரதன் வாழ்வின் சிக்கலே கருக்கொள்கிறது.**

---

கொள்ளும். அத்தகையோர் வாழ்க்கை முழுவதும் பழியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் நீண்ட போராட்டக்களமாகவே அமைந்து விடுதல் உண்டு.

அத்தகு பேரவலப் பாத்திரமாகவே கம்பன் பரதனைத் படைத்துக் காட்டுகிறான்.

புகழ்க்குணங்கள் பலவும் நிரம்பியவன் பரதன். ஆனால் அவன் மேல் பழி வந்து படர்ந்து விடுகிறது. அதுவும் பெற்ற தாய் வழி வருவது பேரவலமாகி விடுகிறது. அயோத்தியிலும், கிஷ்கிந்தையிலும், இலங்கையிலும் அவனை முற்றிலும் தூயன் என்று உணர்ந்தோர் மிகச் சிலர். பலரும், அவனை ஐயக்கண் கொண்டே நோக்கினர். இராமன் ஒருவனே அவனை முற்றாக அறிந்தவன். பெற்ற தாய், மகன் விருப்பம் இது என அறியாது



www.saivamonline.com

குற்றமிழைக்கிறாள். வளர்த்த தாய், அவனை ஐயுற்றுப் பின் தெளிகிறாள். தம்பி இலக்குவன் கொலை வேகம் கொண்டு பகைக்கிறான். அவன் கருத்தில் தடுமாறிக் குகனும் ஐயுற்றுப்பேதலிக்கிறான். தந்தையோ இவன் என் மகனே அல்லன் என்று பழி சுமத்திச் சாகிறான். இந்தப் பேரவலங்களிலிருந்து கம்பன் பரதனை மீட்கும் அருமையில் மானுடவியல் கூறுகள் பட்டை தீட்டப்படுகின்றன.

பரதனைப் பொறுத்தவரை, கோசலம் அவனுக்குக் குழப்பம் நிறைந்தே அமைகிறது. அங்கே மக்கள் தெளிவானவர்கள். ஆனால், இராமன் மேல் கொண்ட அளப்பரிய பாசத்தால் மன்னன் தசரதன் குழப்பத்தில் வாழ்கிறான்.

பிள்ளைப் பேறு வாய்க்காதவள், மாற்றாள் மகனைத் தன் மகனாக வளர்ப்பது புரிந்து கொள்ளக் கூடிய உலகியல்.

---

**அறிவும் உணர்வும், மனித மனத்தின் உள்ளே இடையறாது போராடி நிற்கும் இரு கூறுகள், அறிவு, உணர்வைப் புறங்கண்டு மேலெழும்போது மனிதன் உயர்கிறான். உணர்வு வெல்லும் போது தாழ்கிறான்.**

---

அல்லது, தன் வயிற்றில் பிறந்த மகன் அறிவுக்குறைபாடு உடையவனாக இருந்தால் அவனைப் புறக்கணித்து மாற்றாள் மகனை ஒருத்தி தன் மகனாக வளர்த்தல் தகும்.

அறிவும் ஆற்றலும் நிரம்பி, இராமனுக்கு இணையான குணநலம்மிக்க பரதன் இருக்கும் போது, கைகேயி இராமனைத் தன் மகன் எனப் போற்றி நின்றது தசரதனின் அரசியல் சதுரங்கத்தில் ஓர் அங்கம் என்பது தெளிவு.

தான் பெற்ற மகன் இராமனைக் கைகேயிடம் வளர விட்டு விட்டுப் பரதனைத் தன் மகனாக வளர்க்கும் கோசலையின் நிலையும் ஒரு புரியாத புதிரே.

அரசகுலத்தில் பிறந்த தன் மிகுந்த அன்புக்குரிய மனைவியிடம், ஆசைக்குரிய தன் அன்பு மகன் இராமன் வளர



www.saivamonline.com

வேண்டும் என்று தசரதன் போட்ட கணக்கில்தான் பரதன் வாழ்வின் சிக்கலே கருக்கொள்கிறது.

பாத்திரப் புனைவைக் காப்பியம் முற்றும் அறியாதவர்களுக்கு விளக்குவது ஒருமுறை. காப்பியத்தைக் கரைகண்டவர்களுக்கு உன்னதங்களை அடையாளம் காட்டுவது மற்றொரு வகை. இவ்வாய்வு இரண்டாம் வகையினது.

கைகேயி கேட்ட வரங்களால் பரதன் மீது பழி வந்து நிறைகிறது. பெற்ற தாய்க்குத் தன் விருப்பம் தெரிந்திலது. ஆனால், பல்லாண்டு வளர்த்தெடுத்த தாயைக் கண்டால் தன் துயர் தீரும் என்று நம்புகிறான் பரதன். பழியும் படரும் நிறைந்த கனத்த நெஞ்சுடன் கோசலை தாள்களைப் பணிகிறான்.

---

**பேரறிவும், சிந்தனைத் தெளிவும் மிக்கவர்கள் கூட துன்ப மிகுதியால் தன்னிலை இழந்து விடுகின்றனர். தன் இழப்பில் நிலை தடுமாறாத சிலரும், தன் அன்புக்குரியாரின் துன்பத்தில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அதிலும், பெற்ற மகனுக்கு ஓர் இழப்பு என்றால் தாய் மனம் பெரும் பேதலிப்பில் தங்குகிறது. ஆண்களை விடப் பெண்கள் இக்களங்களில் அதிகமாக நிலை தடுமாறி விடுகின்றனர்.**

---

''இரதம் ஒன்று ஊர்ந்து, பார் இருளை நீக்கும் அவ்
வரதனில் ஒளிபெற மலர்ந்த தொல்குலம்''
பரதன் என்று ஒரு பழிபடைத்தது''

என்று பரதன் புலம்பி நிற்கிறான். கோசலை நெஞ்சம் பரதன் குற்றமற்றவன் என்றே அறிகிறது.

''நிலம்பொறை ஆற்றலன் நெஞ்சம் தூய்து எனா
சலம் பிரிது உற மனம் தளர்ந்து கூறுவாள்''

எனத்தொடங்கிக் கோசலை கூற்றைக் கம்பன் பதிவு செய்கிறான்.



www.saivamonline.com

அந்தக் கூற்றில் இழையோடும் ஒரு ''தொனி'' பரதனைச் சுட்டெரிக்கிறது.

அறிவும் உணர்வும் மனித மனத்தின் உள்ளே இடையறாது போராடி நிற்கும் இரு கூறுகள். அறிவு, உணர்வைப் புறங்கண்டு மேலெழும் போது மனிதன் உயர்கிறான். உணர்வு வெல்லும்போது தாழ்கிறான். கோசலை சராசரி விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்ட ஒரு மானுடப்பெண். பரதன் தோற்றமும் துயரும் கண்ட அவள் அறிவு.

''மையறு மனத்து ஒரு மாசு உளான் அலன்
செய்யனே''

எனத் தேற்றம் கொள்கிறது. ஆனால், அறிவைப் புறம் கண்ட உணர்வு, பெற்ற மகன் மேல் கொண்ட பாசமும், மாற்றாள் மேல் கொண்ட வெறுப்பும் காரணமாக மேலெழ,

---

**பொதுவாகவே கடுஞ்சொற்களும், கடுமொழிகளும் ஐயக்குறியீடுகளும் மனிதனைப் பாதிப்படைய வைப்பன. அதன் அளவு, அது எவரிடமிருந்து வருகிறது என்பதைப் பொறுத்தே அமைகிறது.**

---

''கைகயர் கோமகள் இழைத்த கைதவம்
ஐய, நீ அறிந்திலை போலுமால்''

எனக் கோசலையை வினவச் செய்து விடுகிறது.

பேரறிவும், சிந்தனைத் தெளிவும் மிக்கவர்கள் கூட துன்ப மிகுதியால் தன்னிலை இழந்து விடுகின்றனர். தன் இழப்பில் நிலை தடுமாறாத சிலரும், தன் அன்புக்குரியரின் துன்பத்தில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அதிலும், பெற்ற மகனுக்கு ஒரு இழப்பு என்றால் தாய் மனம் பெரும்போதலிப்பில் தங்குகிறது. ஆண்களை விடப் பெண்கள், இக்களங்களில் அதிகமாகவே நிலை தடுமாறி விடுகின்றனர். தன் கோயிலில், தான் ஈன்ற மகனாகவே கருதிப் பரதனை வளர்த்தவள் கோசலை. அவன் இயல்பும், பண்பும், அவள் அறியாதன அன்று. மேலும், கைகேயி தீமை சூழ்ந்த காலை, பரதன் பாட்டன் வீட்டில் இருந்திருக்கிறான்.



www.saivamonline.com

இவையாவும் கோசலை அறியாதன அன்று. முன் குறித்தவாறு அறிவு மனம்,

> ''மையறு மனத்து ஒரு மாசு உளான் அலன்
> செய்யனே''

என்று தெளிந்தாலும், அதனினும் முற்பட்ட உணர்வு ஐயச் சொற்களை அள்ளித் தெளிக்கிறது. பரதன் துடிதுடித்துப் போகிறான்.

கோசலையை அன்றி வேறு எவர் ஐயுற்றிருந்தாலும் பரதன் இந்த அளவு கலங்கி இரான். தன்னை நன்கு அறிந்த தன் வளர்ப்பு அன்னையின் ஐயம் அவனைப் பெரிதும் பாதிக்கிறது. பொதுவாகவே சுடுசொற்களும், கடுமொழிகளும், ஐயக்குறியீடுகளும் மனிதனைப் பாதிப்படைய வைப்பன. அதன்

---

**வேதங்களையும், வடமொழி நீதி நூல்களையும் தமிழ்த் தொன்னூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்த கவிஞன் கம்பன். உயர் அறங்களைக் காப்பியத்தில் பதிவு செய்ய இடம் தேடி நின்ற கம்பனுக்குப் பரதனின் சூளுரை தன் எண்ணங்களைப் பதிவு செய்ய நல்ல களமாக அமைகிறது.**

---

அளவு அது எவரிடமிருந்து வருகிறது என்பதைப் பொறுத்தே அமைகிறது. ''கைகேயியாகிய உன் தாயின் செயல்பற்றி பரதனே நீ ஏதும் அறிந்திருக்கவில்லையோ'' என்ற சொற்கள் அவனைப் பெரிதும் பாதித்து விடுகின்றன. தன்னைத் தூயனாக நிலைநாட்ட வேண்டிய இன்றியமையாமை அவனுக்கு உளவாகிறது.

தான் மனத்தாலும் குற்றமற்றவன என்பதைக் கோசலைக்கு அறிவிக்க, வேறு வழி காண இயலாத பரதன், பலபடச் சூளுரைக்கிறான். கம்பன் காப்பியத்தில் அறங்களின் பிழிவான பகுதி இது. தமிழ் இலக்கியத் தடத்தில் சூளுரை என்பது 'தொன்றுதொட்டு வருவது. என் பகைவர்களை நான் வென்று மேம்படுவேன்; இயலாவிடின், நான் இன்னின்ன கீழ்மைகளைச்



www.saivamonline.com

செய்தவனாவேன் எனச் சூளுரை செய்தலைப் புற இலக்கியங்கள் பேசிக்காட்டுகின்றன. சூளுரை மொழிகளின் பின்புலத்தில் தமிழர் பெரிதும் உயர்வாகப் போற்றிய அறநெறிகள் அணிவகுத்து நிற்கும். பரதன் சூளுரையும் அங்ஙனமே அமைகிறது.

வேதங்களையும் வடமொழி நீதி நூல்களையும் தமிழ்த் தொன்னூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்த கவிஞன் கம்பன். உயர் அறங்களைக் காப்பியத்தில் பதிவு செய்ய இடம் தேடி நின்ற கம்பனுக்குப் பரதனின் சூளுரை, தன் எண்ணங்களைப் பதிவு செய்ய நல்ல களமாக அமைகிறது. உயர்நெறிகளைச் சான்றோர் வாய்ச் சொல்லாகப் பதிவு செய்தல் ஓர் உளவியல் உத்தியாகும். அவ்வாறு செய்வதால் அவற்றின் மதிப்பு இரட்டிப்பாகிறது.

---

**எத்தனை வகை அறக்கேடுகள் உலகில் உள்ளன என்பதை இனங்காட்டும் கம்பன், பரதன் வாயிலாக நம்மை மீட்கும் அருமுயற்சிகளில் ஈடுபடுகிறான். கதை நிகழ்வு கடந்த இத்தகைய அறிவூட்டல்களில் கவிஞன் மனிதநேயம் மிக்க ஒரு மாமனிதனாக உயர்கிறான்.**

---

''இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்''

என்ற வள்ளுவம் அரண் அமைக்கிறது. கதைப்போக்கில், பரதன் தன்னைத் தூயன் என நிலைநாட்டக் கூறும் இச்சூளுரைப் பகுதி, அறங்களின் அணி வகுப்பாகக் காப்பிய வாழ்வுக்கு அரண் சேர்க்கிறது.

பரதன் சூளுரையாகக் கம்பன் பத்தொன்பது விருத்தங்களைப் பதிவு செய்கிறான். அவற்றில், ஒரு மனிதன் செய்யத் தகாத கொடுஞ்செயல்கள் எவை எவை என இனங்காட்டப்படுகின்றன. நான் உண்மையில் கைகேயி இழைத்த கொடுமைகளை அறிந்தவனாயின், அறம் பிழைத்த அன்னோர் எய்தும் அருநரகிடை வீழ்ந்தவனாவேன் என்று நீள்கின்றன பரதனின் சூளுரை மொழிகள். அவற்றை முழுவதுமாக எடுத்து மொழிந்து ஆய்வுக்கு



www.saivamonline.com

உட்படுத்தினால், அவை ஒரு தனி நூலாக விரியும் நீட்சி உடையன. இடம் கருதிச் சிலவற்றைக் காணல் தகும். இத்தகு அரிய பதிவுகளில் பாத்திரப் பண்புகள் பளிச் சிடுவதோடு, கவிஞனின் அறநெஞ்சின் அழகும் வெளிப்படுகின்றது.

தீ எரி நரகத்தில், சென்று வீழ்வார் யார்? எவ்வகை அறக்கேடுகள் அன்னாரைத் தீயுழி உய்க்கும் என்பதை அறிவிக்கும் அரியபகுதி இது.

அறநெறி சாராது, அதனைப் புறக்கணித்துப்பொருள் ஈட்டுபவன்.

கருணை சிறிதும் இல்லாத கொடுநெஞ்சம் உடையவன்.

---

**பழி துடைத்துக் கொள்வது மட்டும் அன்று; உலகத்தார் பாராட்டுக்களையும் பெறுவது மானுடத்தின் குறிக்கோளாகவும் அமைதல் வேண்டும். அப்பாராட்டும் தொடர்பற்ற அன்னியரிடமிருந்து வரும்போது, அதன் மதிப்புப் பன்மடங்காகி விடுகிறது.**

---

மாற்றான் மனைவி மீது ஆசைகொண்டு, பிறன் ஒருவனுக்கு உரியாளின் மனையை மிதித்தவன்.

கடும் கோபத்தால், பிறர் மீது சீற்றம் கொள்பவன்.

வலிமை காரணமாக நிலைபெற்ற பிற உயிர்களைக் கொன்று உண்டு வாழ்பவன்.

துறவு நெறி நிற்கும் பெருந்தவத்தோர்க்கு அரிய துயரத்தை விளைத்தவன்.

பெற்றோரையும், பெண்டிரையும் வாளால் கொன்றவன்.

போரில் புறமுதுகிடும் நிலைவந்த போது உயிர்விடாது நாடு மீண்டவன்.

இரவலன் சேமித்து வைத்திருந்த நிதியைத் துன்புறுத்தித் தனதாக்கிக் கொண்டவன்.



www.saivamonline.com

விடை தேடும் வினாக்கள்

திருமால் உலகின் தலைவன் அல்லன் என்று பேசித்திரிபவன்.

அறநெறி வகுத்த அந்தணர்தம் வழி முறைகளில் பிறழ்ந்தவன்.

குற்றமற்ற வேதத்தைப் போற்றாது, இது, திட்டமிட்ட பொய் என்று கூறும் பேய் நெஞ்சு படைத்தவன்.

தாய் பசித்திருக்கத் தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் பாவிகள்.

தன் தலைவன் வீழுமாறு செய்து வாழ்ந்தவன்.

---

**இராம காதையும், மகாபாரதமும் இந்தியத் திருநாட்டின் தொல் இலக்கியங்கள். சகோதரர்கள் தம்முள் பேதமின்றி அன்பு கொண்டு வாழ்ந்து வெற்றியீட்டி வாழ்ந்த கதை இராமன் கதை. அவர்கள், தம்முள் கலாம் விளைத்துப் பகைமை கொண்டு பழிசுமந்து வீழ்ந்த கதை பாரதம். ஒன்று, உடன்பாட்டால் சகோதர அன்பின் உயர்வைப் பேசியது. பிறிதொன்று, எதிர்மறையால், பங்காளிச் சண்டையால் வீழ்ந்தவரை இனங்காட்டிச் சகோதர அன்பின் இன்றியமையாமையை வற்புறுத்தி நின்றது.**

---

மேற்குறித்த அறக்கேடு சூழ்ந்தவர்கள் எய்தும் நரகிடை நான் சென்று சேர்வேன் என்கிறான் பரதன்.

எத்தனை வகை அறக்கேடுகள் உலகில் உள்ளன என்பதை இனங்காட்டும் கம்பன், பரதன் வாயிலாக நம்மை மீட்கும் அரு முயற்சியில் ஈடுபடுகிறான். கதை நிகழ்வு கடந்த இத்தகைய அறிவூட்டல்களில், கவிஞன் மனிதநேயம் மிக்க ஒரு மாமனிதனாக உயர்கிறான்.

பரதனின் சூளுரை மேலும் நீள்கிறது.



www.saivamonline.com

அச்சூளுரைகளின் சாரமாகச் சிலவற்றை இனம் காண்பது பாத்திர உயர்வை அறிய உதவுவதோடு, அறக்கூறுபாடுகளை நாம் அறியவும் உதவுகின்றது.

பொய்க்கரி கூறுதல்; அடைக்கலப் பொருளைத் தனதாக்கி வெளவுதல்; மகனைக் கொல்லுதல்; கன்று பசித்துச் சாகப் பால் கறத்தல்; நன்றியை மறத்தல்; நடுவழியில் உயிர் பெரிதென்று மகளிரைக் கைவிட்டு ஓடுதல்; அயலார் பசித்திருக்க உண்ணுதல் ஆகியவற்றைக் குற்றங்களாகப் பதிவு செய்யும் கம்பன், அரசியல் வஞ்சகர்களையும் இனம் காட்டுகின்றான்.

---

**"குட்டி குலைத்துத் தாய் தலையில் வைத்தது" என்று ஒரு பழமொழி உண்டு. மனிதர்கள் தெரிந்தும் தெரியாமலும் பல தவறுகளைச் செய்கின்றனர். அவற்றின் பயனை, அவர்கள் மட்டுமே நேராக நுகர்கின்றனர் என்று கூற முடியாது. சில நேரங்களில் அவற்றின் பயனை ஒரு குற்றமும் அறியாத அன்னாரின் சுற்றத்தார் நுகர நேர்ந்து விடுகிறது. நாம் போடும் கணக்குகள் யாவும் நாம் நினைத்த விடைகளைத் தருவதில்லை. ஏனெனில், நம்மில் பலர் விடைகளை விரும்பித் தீர்மானித்துக் கொண்டே வினாக்களைத் தொடங்குகின்றனர்.**

---

"அழிவு அரும் அரசியல் எய்தி ஆகும் என்று
இழி வரு சிறுதொழில் இயற்றி ஆண்டு தன்
வழி வரு தருமத்தை மறந்து மற்று ஒரு
பழி வரு நெறிபடர் பாதகன் ஆக யான்".

அரசியல் ஆதாயம் கருதி, இழிவரு சிறுதொழில் இயற்றும், கீழோரையும் அடையாளம் காட்டிக் கவிஞன் எச்சரிக்கை விடுக்கிறான்.



www.saivamonline.com

கன்னிப்பெண் ஒருத்தியை வஞ்சித்து அடைய விரும்புவன்; ஆசிரியன் மனைவியைக் காமக்கண் கொண்டு பார்த்தவன். கள் உண்டவன்; திருடன்; உண்ணலாகாதவற்றை நாய் போல் உண்டுநிற்பவன்; பிறர் பழி கூறுவோன்; வேண்டிய ஒருவனுக்கு உண்டு இல்லை என்று ஒன்று கூறாது அலைக்கழிப்பவன்; பகைவர் தன் நாடழிக்கவும், எதிர்த்துப் பொறாது அஞ்சி உயிர் வாழ்பவன் முதலியோர் கீழ்மையர் என்கிறது ப்ரதன் நெஞ்சம். இந்த நீண்ட வஞ்சின மொழிகள் கோசலையின் ஐயத்தை அகற்றி அவனைத் தூயன் என நிலைநாட்ட உதவுகின்றன.

நல்லறங்கள் பலவற்றையும் அறிந்து, அவற்றைப் பெரிதெனப் போற்றும் இப்பண்புடைய பரதன், குற்றமற்றவன் என்று உணர்ந்த கோசலை,

---

**வேள்வித் தீ முன்னர், அம்மி மிதித்து அருந்ததி பார்த்து மணந்தவளை, ஆத்திரத்தில் ஒரே வார்த்தையில், இவள் என் தாரம் அல்லள் என்பதால் மனைவி என்னும் உறவு அற்று விடாது. என்றாலும், சினத்தின் உச்சியில் சிந்தனைக்கு இடமில்லை என்று கம்பன் காட்டுகிறான்.**

---

''முன்னை நும்குல முதலுளோர் கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்
மன்னர் மன்னவா என்று வாழ்த்தினாள்''

என்று வாழ்த்தியதாகக் கம்பன் நிறைவிக்கிறான். கோசலையின் இந்த ஐயம் இப்போது நீங்கியது மட்டும் அன்று, பதினான்கு ஆண்டுகளுக்குப்பின் பரதனைப் பற்றிய மதிப்பீடு அவள் நெஞ்சில் எவ்வாறு உயர்கிறது என்பதையும் கம்பன் இனங்காட்டத் தவறவில்லை.

நந்தியம் கிராமத்தில் இராமன் பாதுகைகளே துணையாக தவவாழ்வு வாழ்ந்து வரும் பரதன், குறித்த நாளில் இராமன் நாடு திரும்பாமையால் தீப்புகுந்து உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிகிறான். செய்தி அறிந்த கோசலை, நெஞ்சம் துடிதுடித்துப்



www.saivamonline.com

பரதனைச் சென்றடைகிறாள். "பரதா நீ தீப்புகத்துணிந்தால் இந்த நாடே தீப்பாய்ந்து அழியும்; நாற்பெரும்படையும் தீப்புகும்; தாயர்களாகிய நாங்கள் மட்டும் அன்று, சிறப்புமிக்க அறமும் தீயில் மாயும்; உலகில் நிலை தடுமாறும்."

தரும நீதியின் தன் பயன் ஆவது உன்
கருமமே அன்றிக் கண்டிலம் கண்களால்
அருமை ஒன்றும் உணர்ந்திலை ஐயநின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ?

---

**ஈன்றணிமையுடைய தாய்ப்பசு, தன் கன்றின் அருகில் வருவாரை எல்லாம் பகைத்துச் சீற்றம் கொள்ளும். கன்றுக்குப் புல் தரவும், நீர் வழங்குவதற்கும் வருவாரையும் கூட அன்பு மிகுதியால், இவர் நம் கன்றுக்குத் தீங்கு இழைத்து விடுவாரோ என்று ஐயுறுவது தாய்ப்பசுவின் இயல்பேயாகும். அதுபோல் இராமன் மீது கொண்ட அளவற்ற அன்பால், பரதனை உள்ளவாறு மதிப்பிட்டு அறியாது, பகைத்துப் பின் அவன் பண்பில் உருகும் இரண்டு பாத்திரங்கள் இராம காதையில் உண்டு. ஒருவன் உடன் பிறந்த தம்பியாகிய இலக்குவன். இன்னொருவன் இராமன் உவந்தேற்ற தம்பியாகிய குகன்.**

---

நீதியின் பயன் பரதனின் செயல்கள் என்று மதிப்பிடும் கோசலை, அவனை ஓர் ஒப்புமை மூலம் பாராட்ட நினைக்கிறாள். தன் வயிற்றில் உதித்த இராமனை நினைக்கிறாள். பரதனை, அவன் செயல்களை, அன்பு நெஞ்சம் சீர் தூக்கிப் பார்க்கிறது. பண்பில், சகோதர பாசத்தில் பழிதுடைக்கும் பேருணர்வில், பரதன் இராமனை விட உயர்ந்தவன் என்று நல் நெஞ்சம் இனம் காண்கிறது. அவ்வுயர்வின் அளவு எத்தகையது? எவ்வளவினது? நாம் வியக்கக் கோசலை மதிப்பீடு அமைகிறது,



www.saivamonline.com

எண்ணில் கோடி இராமர்கள் என்னிலும்
அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோகோடி

இராமர் அருளுக்குப் பரதன் நிகரானவன் என்கிறது, அன்று ஐயுற்ற கோசலை மனம்.

தயரத குமாரர்கள் பிறந்தகாலை கம்பன் முனிவன் கூற்றாகக் கதை நடத்துவான். ஒவ்வொருவர் பிறப்பாகக் கூறிவரும் கம்பன் பரதனைக் கைகேயி பெற்றெடுத்ததைக் கூறும் போது குலமுறை கிளத்துப் படலத்தில்,

---

**அரசு கட்டிலுக்காகவும் ஆட்சி அதிகாரங்களுக்காகவும் தந்தை மகனைக் கொல்வதும், மகன் தந்தையைக் கொல்வதும், உடன் பிறந்தவர்களைப் பகைவனுக்குக் காட்டிக் கொடுப்பதும் என உலக வரலாறுகளில் படித்து வெறுத்த நம் மனத்திற்குப் பரதன் இராமன் பண்பாட்டு உறவு ஆறுதலாக அமைகிறது. இராமாயணம் காலத்தை வென்று வாழ்வதற்கான காரணக்கூறுகளில் இதுவும் ஒன்று என்று மனம் இனங்கண்டு மகிழ்கிறது.**

---

தள்ள அரிய பெருநீதித் தனிஆறு புக மண்டும்
பள்ளம் எனும் தகையானை பரதன் எனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ் இருந்த
வள்ளலையே அனையானை கேகயர்கோன் மகள் பயந்தாள்

என்று முனி மொழியாக அறிமுகம் செய்வான். ''தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும் பள்ளம்'' என்ற தொடரின் முழுப்பொருளையும் நிலைநாட்டப் பரதனின் சூளுரைகளைப் பதிவு செய்து, அவன் நீதியின் உறைவிடம் என்பதை நிலை நாட்டுவான். வள்ளலையே அனையான் என்ற அறிமுகத்தை வளர்த்து, அவன் கோடி இராமர்களுக்கு இணை என்று உயர்த்தி மகிழ்வான். பாரதத்தில் அறப்பாத்திரமாக மூத்தவன் தருமன்



www.saivamonline.com

அமைந்தான். இராம காதையில் இளையவன் பரதன் தரும வடிவாகச் சிறப்பதைக் கண்டு மகிழ முடிகிறது.

பழி துடைத்துக் கொள்வது மட்டும் அன்று; உலகத்தார் பாராட்டுக்களையும் பெறுவது மானுடத்தின் குறிக்கோளாகவும் அமைதல் வேண்டும். அப்பாராட்டும் தொடர்பற்ற அன்னியரிடமிருந்து வரும்போது அதன் மதிப்புப் பன்மடங்காகிவிடுகிறது. பரதனுக்கு அத்தகு பாராட்டுக் கிடைக்கும் ஓர் இடம் நினைவு கூர்ந்து மகிழத்தக்கது.

இராமகாதையும், மகாபாரதமும் இந்தியத் திருநாட்டின் தொல் இலக்கியங்கள். சகோதரர்கள் தம்முள் பேதமின்றி அன்பு கொண்டு வாழ்ந்து வெற்றியீட்டி வாழ்ந்த கதை இராமன் கதை.

---

**நமது வீர இலக்கியங்கள் யாவும் ஒரு மொழி பேசிய தமிழர்கள் மொழி வழி ஒன்றுபடாது இனவழிப் பிரிந்து நின்று போரிட்டு மடிந்த அவலத்தை ஏந்தி நிற்பன. அதிலும், தாயாதிகளும், பங்காளிகளும், தந்தை மகன்களும் நாட்டாட்சிக்காகப் பகைத்துப் போராடிய அவலம் கம்பனை வெகுவாகப் பாதித்திருக்க வேண்டும். இந்த அவலத்திலிருந்து தமிழரசர்களை மீட்டு அரச வாழ்வில் அன்பினை நிலைநாட்டப் பரதன் பாத்திரம் கம்பனுக்குப் புதையலாகத் தென்பட்டது.**

---

அவர்கள், தம்முள் கலாம் விளைத்துப் பகைமை கொண்டு பழிசுமந்து வீழ்ந்த கதை பாரதம். ஒன்று, உடன்பாட்டால் சகோதர அன்பின் உயர்வைப் பேசியது. பிறிதொன்று, எதிர்மறையால் பங்காளிச் சண்டையால் வீழ்ந்தவரை இனங்காட்டிச் சகோதர அன்பின் இன்றியமையாமையை வற்புறுத்தி நின்றது.

கட்டுக்கோப்பான, அன்பு நிறைந்த அயோத்திச் சகோதரர்களை இனங்காட்டும் கம்பன், தம்முள் பகைத்துக்கொண்டதால் வீழ்ந்த இரு சகோதரர்களையும் நமக்கு



www.saivamonline.com

இனம் காட்டுகின்றான். ஒருவன், கிஷ்கிந்தையில் வாழ்ந்த வாலி. இன்னொருவன் இலங்கையில் வாழ்ந்த இராவணன்.

வாலி சுக்ரீவன் சண்டையில் சிக்கிக் கொள்கிறான் இராமன். உணர்ச்சி வயப்பட்டுச் சுக்ரீவனுக்குத் தந்த வாக்குறுதியை அனுமன் நன்கு பயன் கொள்கிறான். வாலி சுக்கிரிவன் சண்டையில் மறைந்திருந்து அம்பு எய்யும் அவலம் இராமனைச் சூழ்ந்து கொள்கிறது. வாலி இராமபாணத்தால் அடியுண்டு தரையில் சாய்கிறான். அவன் அருகில் இராமன் சென்றதும் ஆத்திரத்தில் பலபட, இராமனை நிந்தனை செய்கிறான். வாலியின் வாதங்களைப் பலவாகக் கம்பன் பதிவு செய்கிறான். முதன்முதல், வாலி இராமனை நோக்கி இகழ்ந்து கூறுவதில் இராமா நீ தசரதன் மைந்தன் தானா? என்பது ஒன்று; ''மற்றொன்று'' நீ பரதனுக்கு முன்னே பிறந்தவன் தானா என்பது.

அயோத்தியிலிருந்து, பல ஆயிரம் கல் தொலையில் இருக்கும் கிஷ்கிந்தை வேந்தனான வாலிக்குத் தயரதன் நேர்மையும், பரதனின் சகோதர பாசமும் நன்றாகவே தெரிந்திருக்கின்றன.

> ''வாய்மையும் மரபும் காத்து மன்உயிர் துறந்த வள்ளல்
> தூயவன் மைந்தனே நீ பரதன் முன் தோன்றினாயே?

நீ பரதனுக்கு அண்ணணா என்ற வினாவின் பின்னணியில், பரதனின் தியாகம் முழுவதும் வாலி அறிந்திருந்தான் என்பதை உணர முடிகிறது. மேலும் வாலி பேசுகிறான்.

''பெற்ற தாதை பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து நாட்டு ஒரு கருமம் செய்தாய்; எம்பிக்கு இவ்வரசை நல்கிக் காட்டு ஒரு கருமம் செய்தாய்; கருமந்தான் இதன்மேல் உண்டோ?''

என்ற கூற்றில் அயோத்தி நிகழ்வுகள் யாவும் வாலிக்குத் தெரிந்திருப்பதை உணர்கிறோம்.

அயோத்தி நிகழ்வுகளில் வாலியின் உள்ளம் கவர்ந்தவன் இராமன் அல்லன். நாளை காலை, இராமன் கோமுடி சூடுவான் என்று நாட்டு மக்களுக்கு உரைத்த உரையை நிறைவேற்ற இயலாத நிலையில், தன் உயிர் நீத்து வாய்மையும் மரபும் காத்த தசரதன்,



www.saivamonline.com

வாலி நெஞ்சில் உயர் இடம் பிடித்துள்ளான். அடுத்துத் தந்தை தாயுரை கொண்டு வழங்கிய அயோத்தி அரசை ஏற்காது, ''முறைமை அன்று'' என்ற முனைப்போடு அதனை மூத்தவன் இராமனுக்கு வழங்கி அவன் பணித்தவாறு, பாதுகையை அரியணை ஏற்றி, துறவுக்கோலத்தோடு தவவாழ்வு வாழும் பரதன் அவன் நெஞ்சில் நிறைகிறான். ''ஆயிரம் காரணங்கள் கூறப்பட்டாலும், மூத்தவன் இருக்க இளையவன் அரியணை ஏறுதல் தகாது என்ற தருமம் காத்த பரதனோடு முன்பிறந்த நீ, என்னை வீழ்த்தி என் இளவலுக்கு நாடு வழங்க முன்வந்துள்ளாய். இச்செய்கை உன்னைப் பரதனுக்கு மூத்தோன் என்று கூறிக் கொள்ள நாணம் தருவதாகும் என்கிறான் வாலி. ஒரே குலையில் பழுத்த பழங்கள் தம்முள் சுவை வேறுபடாது, ஒன்று போல் இருக்கவும், ஒரு குடியில் பரதனோடு பிறந்த நீ குணத்தால் மாறுபட்டிருப்பது ஐயம் தருகிறது என்று வாலி இராமனை நகையாடுகிறான். பரதன் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையிலிருந்து இராமன் ஒரு பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பது வாலியின் வாதம். இங்கே பரதனின் நீதியுணர்வு நெஞ்சில் நிறைகிறது.

தம்பியைக் கொல்லத் துணிந்து, தம்பி மனைவியைப் பற்றிவைத்திருக்கும் வாலி போன்றவனின் பாராட்டு மொழிகள் பரதனுக்குப் பெருமையாகுமா என்ற வினா எழுவது இயற்கை.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்ற குறள் நெறி அறிந்தார் நெஞ்சில் இவ்வினா எழ நியாயம் இல்லை. மற்றொன்று, மரணத்தின் வாயிலில் வரும் சொற்களில் பொய்மை இருத்தல் இல்லை. இவ்வுண்மைகள் உணரப்படும் போது வாலி கூற்றின் மெய்மையும் உணரப்படும்.

வாலியின் இக்கூற்று, இராமனுக்கும் இசைந்ததே என்பதை நிலைநாட்டக் கம்பன் வேறு ஒரு சான்றையும் பதிவு செய்துள்ளான். வாலியை மறைந்திருந்து கொல்வது என இராமன் முடிவெடுத்ததை இலக்குவன் முன்னதாக ஏற்றிலன். அண்ணா இந்தச் சுக்கிரீவன், தன் அண்ணனாகிய வாலியைக் கொல்லக் கொடுங் கூற்றுவனாக உன்னைப் பயன்கொள்ள முனைகின்றான். தன் உடன் பிறந்தவனையே கொல்லத் துணியும் இந்தச் சுக்கீரவன்,





www.saivamonline.com

நம் போன்ற அயலாரிடத்து எப்படி நீதியுடன் நடந்து கொள்வான் என்று எதிர்பார்க்க இயலும் என்று இலக்குவன் ஐயுற்றுப் பேசுகிறான்.

இலக்குவனின் இந்த ஐய வினாவிற்கு இராமன் தரும் விடையில் அவன் பரதன் பால் கொண்டுள்ள உயர்ந்த எண்ணம் வெளிப்படுகிறது. இராமனின் விடை இரண்டு கூறுகளை உடையது. ஒன்று சுக்கிரீவனும், வாலியும் காட்டில் வாழும் விலங்கினத்தினர். இவர்கள் உறவில் அண்ணன் தம்பி என்ற பாச உணர்வினை ஆராயத் தேவை இல்லை என்பது. இவ்விடை இலக்குவனை அமைதிப்படுத்த உரைத்ததே அன்றி இராமன் நெஞ்சார உரைத்த தன்று. இரண்டாவதாக இராமன் கூறுவது,

''எத்தாயர் வயிற்றிலும் பின் பிறந்தார்கள் எலாம்
ஒத்தால் பரதன் பெரிதும் உத்தமன் ஆதல் உண்டோ?

உலகில் தாயர் பலர். அவர் தம் வயிற்று உடன் பிறந்தவர்கள் எல்லாரும் சகோதர பாசத்தில் தலை நின்று விட்டால், பரதன் போன்றோரை அன்னாருள் பிரித்தெடுத்து உத்தமன் என்று பாராட்ட இயலுமோ என்பது இராமன் தரும் விடை. சிறந்த சகோதரனாகத் தன் எதிரில் இருக்கும் இலக்குவனைச் சகோதர பாசத்திற்கு இராமன் உவமை கூறியிருக்க முடியும். ஆனால், இலக்குவன் தன் மேல் கொண்ட பாசத்திலும் மேம்பட்டது பரதனின் பாசம். நீ என் மேல் கொண்ட அன்பு மிகுதியால் பரதனை ஐயுற்றாய். பரதனோ உடன் பிறந்தார் அனைவரிடமும், ஐயமற்ற தூய அன்பினைச் செலுத்தினான் என்பதை இராமன் உளங் கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் உலகியல் பேசி பரதனின் உயர்ந்த சகோதர அன்பைப் புகழ்ந்துரைக்கிறான். அதன் உண்மை உணர்ந்த இலக்குவனும் அக்கூற்றை மறாதொழிகிறான்.

வாலி கூற்றும், அதை ஏற்கும் இராமனது பரதன் பற்றிய உயர் மதிப்பீடும், அப்பாத்திரத்தின் நின்று நிலைபெற்ற புகழுக்குக் கட்டியங்களாக அமைகின்றன.

பரதன் என்ற உயர்ந்த பண்பாளனை உள்ளவாறு அறியாது செயற்பட்ட பலர் இராம காதையில் வருகின்றனர். ''தாய் அறியாக் கன்றில்லை, அக்கன்றை ஆயும் அறியும்'' என்று விராடன் துதியுள் கம்பன் உலகியல் காட்டி இறையியல் பேசுவான். ஐந்தறிவு



www.saivamonline.com

படைத்த தாய்ப்பசுவுக்குக் கூடத் தன் கன்றின் இயல்பு தெரியும். அதற்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்ற தெளிவும் அதற்கு உண்டு. இத்தெளிவு கூட அற்ற தாயாக இராம காதையில் வரும் கைகேயி, தெரிந்தே திட்டமிட்டுத் தன் மகன் பரதனுக்கு இழைத்த கொடுமை பெரிது. ஒரு கோணத்தில் இச்செயல் பரதனுக்குத் தாழ்வைத் தந்தது என்றாலும், அதுவே அவன் புகழ் பூத்து எழவும் இடந்தந்து நின்றது. ''கேட்டினும் உண்டு ஓர் உறுதி'' என்ற தொடர், அவனளவில் மெய்மையாகவே அமைந்தது.

''குட்டி குலைத்துத் தாய் தலையில் வைத்தது'' என்று ஒரு பழமொழி உண்டு. மனிதர்கள் தெரிந்தும் தெரியாமலும் பல தவறுகளைச் செய்கின்றனர். அவற்றின் பயனை, அவர்கள் மட்டுமே நேராக நுகர்கின்றனர் என்று கூற முடியாது. சில நேரங்களில் அவற்றின் பயனை ஒரு குற்றமும் அறியாத அன்னாரின் சுற்றத்தார் நுகர நேர்ந்து விடுகிறது. நாம் போடும் கணக்குகள் யாவும் நாம் நினைத்த விடைகளைத் தருவதில்லை. ஏனெனில் நம்மில் பலர் விடைகளை விரும்பித் தீர்மானித்துக் கொண்டே வினாக்களைத் தொடங்குகின்றனர். தன் தவறுகளுக்குத் தான் அனுபவிப்பது புரிந்து கொள்ளத்தக்கது. பிறர் தவறுகளுக்கு நாம் அனுபவிக்கும் போது அதனை விதி என்று கூறுவதைத் தவிர வேறு வழி அமைவதில்லை. பரதனுக்கு வந்துற்ற பழியும் அவ்வாறாகவே வந்தது.

கைகேயி நாட்டிலிருந்து கைகேயின் சீதனப் பொருளாக வந்தவள் மந்தரை எனப் பெயரிய கூனி. இராமன் இளையனாய்க் கைகேயி மாளிகையில் விளையாடி மகிழ்ந்த போது மண் உருண்டைகளை வில்லம்பின் வழி கூனியின் கூனல் முதுகின் மேல் செலுத்தினான். அவன் பிள்ளை விளையாட்டுக் கூனி நெஞ்சில் பகைமைத் தீயை வளர்த்தது. பல ஆண்டுகளுக்குப்பின் இராமனுக்கு முடிசூட்டு விழா என்று அறிவிக்கப்பட்டபோது கூனி சிலிர்த்தெழுந்தாள். மண் உருண்டையால் அடித்தவனுக்கு இந்த மண்ணாட்சியை இல்லாதாக்குகின்றேன் என்று கருவம் கொள்கிறாள். கைகேயின் உறுதியற்ற மனப் போக்கை அவள் பயன் கொள்கிறாள். தசரதன் மாள்கிறான். இராமன் காடு ஏகுகின்றான். இந்தப் பழி வாங்கும் முயற்சியில், கூனி



www.saivamonline.com

வெல்கிறாள். இவர்களோடு எந்த மன உறவும் அற்ற பரதன் மேல் பழி வந்து சூழ்கிறது.

அரசரில் பிறந்து, அரசரில் புகுந்த கைகேயி பரதன் என்னும் உத்தம மகனைப் பெறும் பேறு பெற்ற தெய்வக்கற்பினாள். தசரதனின் அன்புக்குரிய இரண்டாம் மனைவி. சம்பராசுரயுத்தத்தில் கைவிரலையே அச்சாணியாகக் கொடுத்துக் கணவனுக்கு வெற்றி தேடித் தந்த வீரமும் விவேகமும் மிக்கவள். இராமபிரானை வளர்க்கும் பேறு வாய்க்கப்பெற்றவள். இருந்தும், தன் மகன் இதனை விரும்புவானா மாட்டானா என்பதை நுனித்தறிவும் அறிவின்றிச் கூனி சொற்களால் மனம் மாறிப் பழி சுமக்கிறாள். மகனுக்கு நாட்டாட்சி பெற்றுத்தந்ததாக, அவனுக்கு நன்மை செய்வதாக நினைத்துப் பெரும் பழியைச் சூட்டி வைக்கிறாள். இம் முயற்சிகள் பற்றி யாதொன்றும் அறியாது பாட்டன் வீட்டில் தங்கியிருக்கும் பரதனைப் பழி தேடிச் சென்று பற்றுகின்றது.

ஒன்றும் அறியாது, கோசலம் திரும்பும் பரதனுக்குப் பேரதிர்ச்சிகள் காத்துக்கிடந்தன. கைகேயிடம்,

''ஆண் தகை நெடுமுடி அரசர் கோமகன்
யாண்டையான் பணித்திர்''

என வேண்டிநிற்கிறான். சிறிதும் கலக்கமில்லாத கைகேயி,

''தேன் அமர் தெரியலான் தேவர் கைதொழ
வானகம் எய்தினான்; வருந்தல் நீ''

என்று விடை தருகிறாள். பலபட அழுது அரற்றிய பரதன் அண்ணன் இராமன் எங்கே என வினவுகிறான். கைகேயி,

''தெவ் அடு சிலையினாய் தேவி தம்பி என்று
இவ் இருவரொடும் கானத்தான்''

என்று விடை தருகிறாள். பரதன் துடி துடித்துக் காரணம் கேட்கிறான். அவளோ,

''வாக்கினால் வரம் தரக்கொண்டு, மைந்தனைப்
போக்கினேன் வனத்திடை; போக்கி, பார் உனக்கு
ஆக்கினேன்; அவன் அது பொறுக்கலாமையால்
நீக்கினான் தன் உயிர் நேமி வேந்து''

என்று சலனம் சிறிதுமின்றி விடை தருகின்றாள்.



www.saivamonline.com

கைகேயியின் கொடுமை உணர்ந்த பரதன் கொதித்து மொழியும் சொற்கள் கழிவிரக்கம் மிக்கன.

> ''நோயீர் அல்லீர் நும் கணவன் தன் உயிர் உண்டீர்
> பேயீரே நீர், இன்னம் இருக்கப் பெறுவீரே,
> மாயீர், மாயா வன் பழி தந்தீர், முலை தந்தீர்
> தாயீரே நீர், இன்னும் எனக்கு என் தருவீரே,

அன்னை மீது, அவன் கொண்ட கடுங்கோபம், அவளைக் கொன்று தொலைக்கவும் நீண்டிருக்கும். இதனைச் செய்தால் இராமபிரான் கோபிப்பானே என்று தன் சினம் மாற்றுகின்றான் பரதன். தாயே, உன் இந்தச் செயலை உலகத்தார் ஏற்கமாட்டார்கள். இனியும், யான் பழி சுமந்து உயிர் வாழ மாட்டேன். யாதொன்றாலும் உன் பழி தீரப் போவதில்லை, இத்தகு செயல் நடந்த கோசலத்தில் இனித்திருமகள் தரித்திராள். யார் உனக்கு இந்த யோசனைகளைக் கூறியவர்? யாரொடு கலந்தாய்ந்து இம்முடிவினை மேற்கொண்டாய்? அறம் யாவும் வேரொடு வீழ்ந்து பட்டதே. என்ன காரியம் செய்தாய்?

ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற செய்திகளை, அடுக்கிக் கவிபுனைகிறான் கம்பன். கோபத்தில் கருத்துக்கள் தொடர்ந்து நடையிடா என்ற உளவியல் காட்டுகின்றான் கவிஞன். கோசலையைக் கண்டு அவள் ஐயுற, சூளுரைத்துத் தன்னைக் குற்றமற்றவன் என்று காட்டி நிற்கிறான். வசிட்டனோடு சென்று தந்தையின் உருவைக் கண்டு அழுது அரற்றுகின்றான். தயரதன் உடல் எரியூட்ட சரயு நதிக்கரைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஈமப்பள்ளியில் தசரதன் உடல் கிடத்தப்பட்டதும் அருகில் உள்ளோர் ''வீர நுந்தைபால் பொய் இல் மாக்கடன் கழித்தி போந்து,'' என்று அவனை ஆற்றுப் படுத்தினர். பரதனும், இறுதிக்கடன் இயற்ற முன் வந்தான். அக்காலை, பல்லாயிரவர் கூடி நிற்கும் இடத்தில் வசிட்டன்.

> ''அன்னை தீமையால் அரசன் நின்னையும்
> துன்னு துன்பத்தால் துறந்து போயினான்''

என்று பரதன் உளம் வெறுப்பக் கூறுகின்றான். பெற்றெடுத்த தந்தையே, மகனை, இனி அவன் என் மகன் அல்லன் என்று



www.saivamonline.com

கூறினால் அது எத்தனைப் பேரவலம். தாய் செய்த பிழைக்காகப் பரதன் தந்தையால் தண்டிக்கப்படுகிறான். தாய் எனக்கு வழங்கிய பேறு ஈதோ என்று மாழ்குகின்றான்.

''என்னை, என்னையே ஈன்று காத்த
அன்னையர் எனக்கு அழகு செய்தவா''

என்ற பேசிக் கழிவிரக்கம் கொள்கிறான்.

பரதன் நாடு திரும்பு முன்னர், திரைமறைவில் நடந்த நாடகத்தை அவன் அறியமாட்டான். வசிட்டன் மொழிந்த அறிவுரைகளைக் கேட்ட பின்னரும், கைகேயி தன் கருத்தை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. வசிட்டன், அவளை நிந்தித்து விட்டுத் தயரதனிடம் நிலைமையைக் கூறுகின்றான். பெருஞ்சினம் கொண்ட தயரதன், கைகேயி என் மனைவி அல்லள் என்று அவளைத் துறக்கிறான்.

''இன்னே பலவும் பகர்வான்
இரங்கா தாளை நோக்கி
சொன்னேன் இன்றே இவள் என்
தாரம் அல்லள்; துறந்தேன்''

என்று கூறி அவளைத் துறக்கிறான். வேள்வித் தீ முன்னர் அம்மி மிதித்து அருந்ததி பார்த்து மணந்தவளை, ஆத்திரத்தில் ஒரே வார்த்தையில், இவள் என் தாரம் அல்லள் என்பதால், மனைவி என்னும் உறவு அற்று விடாது. என்றாலும், சினத்தின் உச்சியில், சிந்தனைக்கு இடமில்லை என்று கம்பன் காட்டுகிறான்.

தயரதன் தொடர்ந்து பேசும் போது, கற்பார் நெஞ்சம் பதைக்கிறது. கைகேயி மேற்கொண்ட சினம், யாதொரு காரண காரியமும் இன்றிப் பரதன் மேல் திரும்புகின்றது. அவன் இனி என் மகன் அல்லன் என்கிறான்.

''மன்னே ஆவான் வரும் அப்பரதன்
தனையும் மகன் என்று
உன்னேன் முனிவா அவனும்
ஆகான் உரிமைக்கு''

என்று கூறும் தயரதன் உரையில் ஆத்திரம் மட்டுமே எஞ்சுகிறது.



www.saivamonline.com

உண்மையிலேயே பரதன்பற்றித் தயரதன் கருத்து யாது? அதை அறிந்து கொள்ளவும், கம்பன் ஓர் இடம் அமைக்கிறான். முன் உறுதி கூறிய இரண்டு வரங்களில் ஒன்றால் பரதன் நாடாள வேண்டும். பிறிதொன்றால் இராமன் காடாள வேண்டும் என்று கைகேயி வரங்கேட்கிறாள். பரதன் உயர் பண்புணர்ந்த தயரதன், கைகேயியைச் சினந்து பின் பணிந்து அவள் கால்களில் வீழ்ந்து, ''கொள்ளான் நின் சேய் இவ்வரசு'' என்று, நீ வேண்டியவாறு நான் தந்தாலும், பரதன் இவ்வரசாட்சியை ஏற்கமாட்டான் என்று நம்பிக்கைப் பூண்கிறான். அவனே, பின் தன்னிலை இழந்து பரதன் இனி என் மகன் அல்லன் என்கிறான். ஒவ்வொருவரும் தத்தம் பங்கிற்குப் பரதனைச் சின்னா பின்னப் படுத்தும் அவலம் நம் நெஞ்சைப் பிழிகிறது.

வசிட்டன் உரை கேட்டுப் பரதன், மேலும் அழுது அரற்ற, சத்துருக்கனைக் கொண்டு ஈமக்கடன்கள் இயற்றப்படுகின்றன. அனைவரும் நாடு சேர்கின்றனர். பின் வசிட்டன் பரதனை அணுகி,

''உந்தையோ இறந்தனன்; உம் முன் நீத்தனன்
வந்ததும் அன்னைதன் வரத்தில்; மைந்த நீ
அந்தம் இல் பேரரசு அளித்தி''

நீ நாடாள வேண்டும் என்று வேண்டுகின்றான். அக்காலை பரதனின் உண்மையான மனநிலை நன்கு வெளிப்படுகிறது.

''நல்நெறி என்னினும் நான் இந்நானில
மன்னுயிர் பொறை சுமந்து இருந்து வாழ்கிலேன்
அன்னவன் தனைக் கொணர்ந்து அலங்கல் மாமுடி
தொல்நெறி முறைமையின் சூடிடக் காண்டிரால்''

என்கிறான். ஒரு வேளை, இராமன் நாடு திரும்ப மறுத்தால், என்ற வினாவை, அவனே எழுப்பி விடை காண்கிறான்.

''அன்று எனின் அவனொடும் அரிய கானிடை
நின்று இனிது இருந்தவம் நெறியின் ஆற்றுவென்
ஒன்று இனி உரைக்கின் என் உயிரை நீக்குவென்''

என்றான் பரதன். அவன் உறுதி கண்டு, அவையோர் அவனைப் புகழ்கின்றனர். ''கொள்ளான் நின் சேய் இவ்வரசு'' என்ற, தயரதன் நம்பிக்கையைப் பரதன் மெய்ப்பிக்கிறான். ஆனால், இவன் என் மகன் அலன் என்ற பழி தொடர்கிறது. அதனை நீக்கும் நாள் காப்பியத்தின் நிறைவில் வருகிறது.



www.saivamonline.com

இராமகாதையில் தொடக்கம் முதல் இறுதி வரை பரதனை உள்ளவாறு மதிப்பிட்டு அறிந்த ஒரே பாத்திரம் இராமன் மட்டுமே. தயரதன் சினத்தின் உச்சியில் நின்று ''கைகேயி என் மனைவி அல்லள்; அவள் வயிற்றில் பிறந்த பரதன் என் மகன் அல்லன்'' என்று உரைத்து மாய்ந்த செய்தி இராமபிரானுக்கு எட்டியிருக்க வேண்டும். இந்தச் சிக்கலிலிருந்து அவர்களை விடுவிப்பது எவ்வாறு என்று இராமன் நீளச் சிந்தித்திருக்க வேண்டும். அவனோடு இணைந்து கம்பனும் காலம் பார்த்திருந்திருக்கிறான். வனவாழ்வு, சூர்ப்பணகை வரவு, இராவணன் சீதையைக் கவர்தல், இராமன் இலங்கை சென்று அவளை மீட்டல் என்று நீண்டு சென்ற பதினான்கு ஆண்டுகளில், இடையிடையே பரதன் பற்றிய நினைவு இராமனுக்கு வருதலும், அப்போதெல்லாம் அவனை உயர்வாகப் பேசுதலும் காப்பியத்தில் இடம் பெறுவன. தந்தை மீது அளப்பரிய பற்றுக் கொண்ட இராமன் திருவுள்ளத்தில், தயரதன் மனைவியையும், மகனையும் துறந்தமை மகிழ்வைத் தந்திராது. இந்தச் சிக்கலை விடுவிக்க ஒரு அரிய வாய்ப்பு அமைந்தது. இராமன் அதனைப் பயன் கொண்ட நளினத்தில் பரதன் பால் அவன் கொண்டிருந்த அன்பு பளிச்சிடுகிறது.

சீதை குற்றமற்றவள் என்பதை எடுத்துரைத்து, இராமனைத் தெருட்டுமாறு சிவன், துறக்கத்திலுள்ள தயரதனைப் பணிக்கின்றான். அவனும் இலங்கை போந்து, சீதையைத் தேற்றுகின்றான். இலக்குவனைத் தழுவிப்பாராட்டுகிறான். பின் இராமனை அணுகி, ''யான் உனக்கு ஈவது ஒன்று கூறுதி; உயர் குணத்தோய்'' என அவனை வரம் கேட்குமாறு பணிக்கிறான். இதனைப் பயன்கொண்டு, இராமன் தந்தையிடம்,

''தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்
வரம் தருக''

என்று வேண்டுகின்றான். கம்பன் பாடலை நிறைவிப்பதில் ஓர் அழகு உண்டு. இவ்வாறு இராமன் வரம் கேட்டதும்,

''வாய்திறந்து எழுந்து ஆர்த்தன
உயிர் எலாம் வழுத்தி''

என்று நிறைவித்து, இராமன் பண்பும் பழி துடைக்கும் பாங்கும் கண்டு மன்னுயிர் எல்லாம் மகிழ்ந்து ஆர்த்தன என்கிறான்.



www.saivamonline.com

அப்போதும், தயரதனுக்குக் கைகேயி மேல் கொண்ட சினம் தணிந்திலது. பரதன் என் மகனாகி நின் காதல் தம்பியாகட்டும் ஆனால், நின் முடியினைப் பறித்து உன்னை இவ்விரதக் கோலத்திற்கு ஆளாக்கிய பாவி கைகேயி மேல் என்றும் என் சினம் நீங்காது என்றான். இராமன் மேலும் வேண்ட தயரதன் கைகேயியை மனைவியாக ஏற்கிறான்.

காப்பிய நிறைவில், இறந்த தயரதனை மீண்டும் மண்ணுலகுக்குத் தருவித்து, அவன் வாய்மொழி வழி, பரதனைக் குற்றமற்றவனாகக் காட்டும் கவித்திறம் ஆழம் மிக்கது. காப்பிய நாயகனாகிய இராமனுக்கு இணையாகப் பரதனைப் படைத்துக் காவியத்தின் இணைத் தலைவனாக உருவாக்கி வளர்க்கும் கவிஞன் அவன் பழியொடு நின்றான் என்று முடித்தால், பாத்திரத் தன்மைக்கு இழுக்கு வந்து சேரும். அக்குற்றத்திலிருந்து அவனை விடுவிக்க முயலும் கவிஞனின் அரிய முயற்சியில் பரதன் பாத்திரம், பட்டை தீற்றப் பெற்ற உன்னத வைரமாக ஒளி வீசுகிறது.

ஈன்றணிமையுடைய தாய்ப்பசு, தன் கன்றின் அருகில் வருவாரை எல்லாம் பகைத்துச் சீற்றம் கொள்ளும். கன்றுக்குப் புல் தரவும், நீர் வழங்குவதற்கும் வருவாரையும் கூட அன்பு மிகுதியால் இவர் நம் கன்றுக்குத் தீங்கு இழைத்து விடுவாரோ என்று ஐயுறுவது தாய்ப்பசுவின் இயல்பேயாகும். அதுபோல் இராமன் மீது கொண்ட அளவற்ற அன்பால் பரதனை உள்ளவாறு மதிப்பிட்டு அறியாது, பகைத்துப் பின் அவன் பண்பில் உருகும், இரண்டு பாத்திரங்கள். இராமகாதையில் உண்டு. ஒருவன், உடன் பிறந்த தம்பியாகிய இலக்குவன். இன்னொருவன் இராமன் உவந்தேற்ற தம்பியாகிய குகன். அன்னார் சீற்றங்களுக்குப் பின் எழுந்த தெளிவில் பரதன் மாணிக்கமணியாக ஒளிவிட்டுச் சுடர்கிறான்.

சுமித்திரை, இரண்டு சிங்கங்களைப் பெற்றெடுத்தாள். ஒருவன் இலக்குவன், மற்றவன் சத்துருக்கன். முன்னவன் இராமனுக்குத் தொண்டன். பின்னவன் பரதனுக்குத் தொண்டன். இணை பிரியாத இவ்விரட்டையர்களில் பரதன் சத்துருக்கன் உறவு இராமகாதையில் விரிவாகப் பேசப்படவில்லை. சத்துருக்கனும், இலக்குவனுக்கு இணையாகப் பரதன் மேல் அன்பு பூண்டவன். அவன் பேசும் ஓரிரு இடங்களிலேயே, அவனைக் கம்பன் நம்



www.saivamonline.com

நெஞ்சில் நிறுத்துகின்றான். கானகம் சென்ற இராமன், குறித்த நாளில் அயோத்திக்குத் திரும்பவில்லை. பரதன், முன் உரைத்தவாறு தீப் பாய்ந்து உயிர்விடத் தீர்மானித்துத் தம்பி சத்துருக்கனை அழைக்கிறான். அழைத்து,

''சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்''
மின்னு தீயிடை யான் இனி வீடுவன்
மன்னன் ஆதி என் சொல்லை மறாது''

என்று தன் வேண்டுகோளை அவனுக்குத் தெரிவிக்கிறான். கேட்ட சத்துருக்கன் விம்மி, வெய்துயிர்த்து நான் உனக்கு என்ன பிழை செய்தேன் என்று கோபம் கொண்டு அவன் சொல் மறுத்துப் பேசுகிறான். கம்பனில் ஓர் அழகான அர்த்தம் நிறைந்த பாடல் சத்துருக்கன் கூற்றாக இடம் பெறுகிறது.

''கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்து, பின்பு
போனானும் ஒரு தம்பி; போனவன்
தான் வரும் அவதி போயிற்று என்னா
ஆனாத உயிர்விட என்று அமைவானும்
ஒரு தம்பி; அயலே நாணாது
யானாம் இவ்வரசு ஆள்வேன்? என்னே
இவ்வரசாட்சி இனிதே அம்மா''

இலக்குவனையும் பரதனையும் ஒரு சேரப் புகழ்ந்து பேசி நாட்டாட்சியை ஒரு போதும் நான் ஏற்க மாட்டேன் என்று கூறும் சத்துருக்கன் கூற்றில், பரதனின் பண்புகள் பிரதி பலிக்கக் காண்கிறோம்.

இலக்குவன் நிலை வேறானது. அவன் காப்பியத்தில் இராமனின் நிழலாகக் கதை முழுதும் வருகிறான். அவன் இராமனுக்குத் தான் இன்றியமையாதவன் என்று ஒரு போதும் கருதாதவன். மாறாக இராமனைத் தன் வாழ் முதலாகக் கருதி வாழ்பவன். நீர் குளத்தில் இருந்தால்தான் மீன் உயிர் வாழும். நீரை நீங்கினால், மீனுக்கு வாழ்வேது? என்று பேசி இராமனைப் பின் தொடர்ந்தவன். இராமனுக்குத் தவறு இழைத்ததாகத் தோன்றினால், இன்னார், இனியார் என்று பாராது வெகுளும் பேரன்பில் தலை நிற்பவன். இந்த அளப்பரிய அன்பில் அவன்



www.saivamonline.com

பரதனைப் பெரிதும் பகைக்கிறான். அவன் கோபக் கனல் கண்டு இராமனே அஞ்சும் நிலை வருகிறது.

கைகேயி சூழ்வினையால், இராமன் காடு செல்வான் என்பதை அறிந்த இலக்குவன் பெருஞ்சீற்றம் கொள்கிறான். கைகேயி பால் கொண்ட சினம், பரதன் மேல் பாய்கிறது. இந்தத் தீயவள் சிங்கத்துக்கு ஊட்ட வேண்டிய இனிய ஊனை நாயின் சிறு குட்டிக்கு ஊட்ட நினைத்தாள் என்று ஏசுகின்றான். அவன் வில்லின் நாண் ஒலி கேட்டு இராமன், இலக்குவன் இருப்பிடம் சேர்கிறான். நின் சினத்தின் காரணம் யாதென வினவுகின்றான். இலக்குவன், நின்னை அம்மௌலி சூட்டடல்,

''செய்யக் கருதித் தடைசெய்குநர் தேவரேனும்
துய்யைச் சுடு வெங்கனலின் சுடுவான் துணிந்தேன்''

என்ற வீரமொழி பேசுகின்றான். அவன் கூற்றில் தயரதன், கைகேயி, பரதன் மூவருமே இராமன் காடேகக் காரணர்கள் என்ற கருத்து நிலவுவதை இராமன் உணர்கிறான்.

''இலக்குவனே! இந்த அரசை ஏற்றுக்கொள் என்று தந்தை தசரதன் கூறியவுடன், அதனை மறாது ஏற்றுக்கொண்ட என்பால் குற்றம் உண்டே அன்றி, மன்னவன் இழைத்த குற்றம் ஏதும் இல்லை. இதற்கு நீ ஏன் பிறரைக் குற்றம் காண்கிறாய்'' என்று சமாதானம் கூறுகின்றான். பின் இம் மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்ற வினாவிற்கு இராமன் விதியைக் காரணம் காட்டுகின்றான். கம்பனின் அரியபடைப்புகளில் ஒன்று இராமன் கூற்றாக வரும் இப்பாடல்.

''நதியின் பிழை அன்று நறும்புனல் இன்மை; அற்றே
பதியின் பிழை அன்று; பயந்து நம்மைப் புரந்தான்
மதியின் பிழை அன்று; மகன் பிழை அன்று; மைந்த,
விதியின் பிழை, நீ இதற்கு என்னை வெகுண்டது?

என்ற காரண காரியங்களுக்கு உட்படாத நிகழ்வுகளை, விதியின் மேல் ஏற்றிக் கூறுவது கவி மரபு. கைகேயி கேட்ட வரத்தால் தான் தான் காடேகும் நிலை வந்துற்றது என்று இராமன் அறிந்திருந்தும், பழியை அவள் மேல் சுமத்தாது விதியின் மேல் சுமத்துகின்றான். தன்னை, அன்பு காட்டி வளர்த்த தாயைப் பிழையுரைக்க விரும்பாத நன்மனம், அவள் மன மாற்றத்துக்கு காரணமான விதியை முன்னிலைப்படுத்து சமாதானம் காண்கிறது. ''மகன் பிழை



www.saivamonline.com

அன்று'' என்பதன் மூலம், பரதன் குற்றமற்றவன் என்பதை இராமன் உறுதி செய்கிறான். இராமனின் இக்கூற்றை இலக்குவன் ஏற்க மறுக்கிறான்.

''விதிக்கு விதியாகும் என் விற்றொழில் காண்டி''

என்று, மேலும் சீற்றம் கொள்கிறான். இலக்குவா, என் சொற்களை ஏற்றுப் போற்றினால் உனக்கு என்ன தாழ்வு வரும்? நின் சினம் தணிக என இராமன் கூறவும் இலக்குவன் சீற்றம் தணிகிறான்.

இலக்குவனின் சீற்றம் பற்றி ஒன்றும் அறியாத பரதன், இராமனைத் தேடி அவன் இருப்பிடம் செல்கிறான். கங்கைக்கரையில் இராமன் தங்கியிருந்த இடம் எது எனக் கேட்டு அறிந்த பரதன், இலக்குவனின் தொண்டு பற்றி வினவுகின்றான். குகன், விடை தருகிறான். அவன் தூய தொண்டு உணர்ந்த பரதன், இலக்குவனோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து மனம் மாழ்குகின்றான். பரதனின் உயர் நெஞ்சம் நம்மை ஈர்க்கிறது.

''இராமனுக்கு இளையார் என்று
முன்பு ஒத்த தோற்றத் தேமில்
யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்
அவன் அது துடைக்க நின்றான்
அன்பத்துக்கு எல்லை உண்டோ
அழகிது என் அடிமை''

பரதனின் சொற்களில் தம்பி இலக்குவனைப் போற்றும் உயர்பண்பு மிளிர்வதைக் காண்கிறோம்.

தற்காலிகமாக இராமன் உரையில் கோபம் தணிந்தான் இலக்குவன், ஆயினும், பரதன் மேல் அவன் கொண்ட ஐயம் தீர்ந்திலது. கங்கை கடந்து, தன் சேனையுடன் பரதன் இராமனை நாடி வருதலைத் தூரத்தே கண்ட இலக்குவன், மீண்டும் சினக்கிறான். போர்க்கோலம் பூண்டு வீர உரை பேசுகின்றான். இராமன் அவன் சினம் தணியுமாறு அறிவுரை கூறுகின்றான் ''நம் குலத்து உதித்தவர் எவரும், தருமநெறி நீங்குதல் உண்டோ'' உலகில் எத்தனை வேதங்கள் உண்டோ, அவை அனைத்தும் இயம்பும் நல்லறங்கள் யாவும் ஒரு சேரப் பெற்ற தருமச் செய்கைகள் உடையவன் பரதன். என் மேல் கொண்ட அன்பு நெஞ்சத்தால் நீ அவனை ஐயுறல் தகாது. அவன் என் மீது கொண்ட



www.saivamonline.com

அன்பால் என்னைக் காணவும் நாட்டை என்னிடம் வழங்கவுமே வருகின்றான்.

> ''சேண்உயர் தருமத்தின் தேவை, செம்மையின்
> ஆணியை அன்னது நினைக்கல் ஆகுமோ?

என்று, பரதன் பெருமை பேசி நிற்கிறான் இராமன். பரதனைத் தருமதேவதை எனவும், செம்மையின் உரையாணி எனவும் மதிப்பிட்டுரைக்கிறான்.

தவக்கோலத்தில் பரதன் நெருங்கி வரக் கண்டு இராமன், இலக்குவனைக் கேலி பேசுகின்றான். பரதனின் போர்க்கோலம் பார்த்தாயா என்று அவன் தவக்கோலம் காட்டுகின்றான். அவன் கோலம் கண்ட அடுத்த வினாடியே இலக்குவன் சினம் அழிந்தொழிகிறது. கண்களில் நீர் பெருக நிற்கிறான். பரதன் குற்றமற்றவன் என்று இலக்குவன் தேர்கிறான். அவன் உரையாடவும் இல்லை. செயலும் அறிந்திலன். காட்சி மாத்திரையிலேயே பிறர் ஐயம் அகற்றி அன்னாரை உருகச் செய்யும் வடிவினான் பரதன் என்பது புலனாகிறது.

காப்பியத்தில், இம்மனமாற்றத்திற்குப் பின், இலக்குவன் பரதன் மேல் பெரும் மரியாதை கொள்கிறான். மாயா சீதைப்படலத்தில், இராமனையே ஐயுறவைத்து இந்திரசித்தன் பரதன் மேல் படை கொண்டு செல்வது போல் போக்குக் காட்டி மாயம் செய்கிறான். பரதன் மேல் கொண்ட அளவற்ற அன்பில் அவன் ஆற்றல் மறக்கிறான். அவனுக்கு ஏதும் தீங்கு வந்துறுமோ என்று மனம் சாம்புகின்றான். அப்போது இலக்குவன் பரதனைப் புகழ்ந்து இராமனிடம் பேசுகின்றான்.

> ''ஐய பரதனை அமரின் ஆர்க்க
> எவ்விடற்கு உரியான் போன இந்திர சித்தே அன்று
> தெவ்விடத்து அமையின் மும்மை உலகமும் தீய்ந்து''

பரதன் பேராற்றலைப் புகழ்கின்றான். பரதனின் பேராற்றலை, இவன் எங்கு எப்போது கண்டான் என்று தெரிந்திலது. ஒருவரைப் பற்றி மனத்தில் உயர் எண்ணத்தை உருவாக்கிக் கொண்டால் அவர், ஆற்றல் பலவும் நிறைந்தவராகவே தோன்றுவர் போலும். பகை மறந்து இலக்குவன் பரதனைப் புகழ்ந்ததில் நம் நெஞ்சம் நிறைவு காண்கிறது.



www.saivamonline.com

இதே போல் பிரமாத்திரப் படலத்தில் இந்திரசித்தன் கணையினால் இலக்குவன் கட்டப்படுகிறான். இத்தனை ஆற்றல் பெற்ற தான் அக்கணைக்குக் கட்டுண்டதை நினைக்கிறான். நினைப்பவன் நெஞ்சில் பரதன் வருகிறான். இவ்வாறான ஒரு வஞ்சத்தில் பரதன் நிலை என்னவாக இருக்கும் என்று சிந்திக்கிறான். உறுதியாகப் பரதனாயின் இக்கணையில் கட்டுண்டிரான் என்று இலக்குவன் மனம் மதிப்பிட்டுப் பார்க்கிறது.

''தீக்கொண்ட வஞ்சன் வீசத்
திசைமுகன் பாசந் தீண்ட
வீக் கொண்டு வீழ யானோ
பரதனும்? வெய்ய கூற்றைக்
கூக்கொண்டு குத்துண்டு அன்னான்
குலத்தொடு நிலத்தன் ஆதல்''

இலக்குவன் நெஞ்சப் பாங்கில் அவன் பரதன் மேல் கொண்ட ஐயம் யாவும் நீங்கி, உயர் எண்ணம் பூத்திருத்தலை இனங்கண்டு மகிழ முடிகிறது. எத்தனை ஐயங்களுக்கும் அப்பாற்பட்ட உத்தமன் பரதன் என்பதைக் கவிஞன் நிலைநிறுத்திக் காட்டுகின்றான்.

உடன் பிறந்த பழகிய அரசர் குலத்து இலக்குவனே பரதனை ஐயுற்றான் என்றால் முன்பின் பரதனை அறியாத குகன் ஐயுற்றதில் வியப்பேதும் இல்லை. பெரும்படையுடன் இராமனை மீட்டு நாட்டிற்கு அழைத்துப் போகப் பரதன் வருகிறான். அவன் படை வரவு கண்டு குகன் தவறுபட நினைத்துச் சினம் கொள்கிறான்.

''அஞ்சன வண்ணன் என் ஆருயிர்
நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அரசு எய்திய
மன்னரும் வந்தாரே''

என்று நினைத்து, பரதனைப் படை கொண்டு எதிர்க்கத் துணிகிறான். பரதனைக் குகன், அவன் இராமன் அரசினை, வஞ்சனையால் கவர்ந்து கொண்டதாகவே கருதியிருப்பது தெரிகிறது. தவறான முதல் மதிப்பீடு, மேலும் மேலும் பொருத்தமற்ற வார்த்தைகளுக்கு இடம் கொடுத்து விடுகிறது.

''முன்னவன் என்று நினைந்திலன்
மொய்புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்''



www.saivamonline.com

அண்ணன் என்றும் பாராது, ஆற்றல்மிக்க இலக்குவன் துணை நிற்பதனையும் எண்ணாது இவன் எப்படிப் படை கொண்டு வந்தான் என்று வினவுகின்றான்.

"பாவமும் நின்ற பெரும் பழியும்
பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண் உலகு
ஆள்பவர் எண்ணாரோ?"

நிலனாள்பவர்களுக்குப் பழிபாவங்களில் நாட்டம் இராதோ? என்றெல்லாம் குகன் பலபட எண்ணிச் சினந்து நிற்கின்றான்.

சுமத்திரன் சொல்வழி, குகன் அன்புணர்ந்த பரதன், கங்கையின் கரை சார்ந்தான். மறுகரையில் இருந்த அவன் தோற்றம் கண்ட குகன் துணுக்கம் எய்துகின்றான். பரதன் தோற்றத்தைக் கம்பன் குகன்கண் வழி காட்டுகின்றான்.

"வற்கலையின் உடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலை இல் மதி என்ன
நகை இழந்த முகத்தானை
கல்கனியக் கனிகின்ற
துயரானை"

குகன் கண்ணுற்றான். அவன் வில் கை நழுவியது. பரதனும் சத்துருக்கனும், இராம இலக்குவர்களாகவே அவன் கண்களுக்குத் தோன்றுகின்றனர். அன்னவன் முகத்துக் காணப்படும் துன்பமும், இராமன் சென்ற திசை நோக்கிக் கைகுவிக்கும் அன்பும் அவன் அன்பைப் பறைசாற்றுகின்றன. குகன் நெஞ்சில் ஒரு துணிபு பிறக்கிறது.

"எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ பிழைப்பு"

இராமனுக்குப் பின்பிறந்தார், தவறு செய்யார் என்ற தெளிவு பிறக்கிறது. குகன், தன் நாவாய் ஏறி கங்கை கடந்து பரதனைப் பணிகின்றான்.

குகனின் நம்பிக்கைப் பொய்த்திலது. பரதனை வணங்கித் தழுவிய குகன், "எழுவினும் உயர்ந்த தோளாய் எய்தியது என்னை?" என, அவன் அங்கு வருகை தந்ததற்கான காரணத்தை



www.saivamonline.com

வினவுகின்றான். பரதன் பதில், குகன் மதிப்பீட்டில், அவனைப் பன்மடங்கு உயர்த்தியது. என் தந்தை முன்னையோர் காத்த முறைமை தவறினான். அத்தவற்றினை நீக்கி, இராமனை மீண்டும் மன்னனாக்க வேண்டியே வந்தேன் என்கிறான் பரதன்.

''முழுதுலகு அளித்த தந்தை
முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க
மன்னனைக் கொணர்வான் என்றான்''

அண்ணனை என்னாது, மன்னனை என்ற பரதன் கூற்றில் தாய் தந்தை எண்ணங்களை, அவன் சிறிதும் ஏற்றிலன் என்பதை உணர முடிகிறது. பரதனின் இந்தச் சொற்கள் குகன் உள்ளத்தில் பரதனை உயர்த்துகின்றன.

''தாய் உரை கொண்டு தாதை
உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச்
சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து
புகழினோய் தன்மைக் கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ்
ஆவரோ தெரியின் அம்மா''

நாம் பலகாலும் கேட்டு மகிழ்ந்த இந்தப் பாடல், பரதனின் பெருமைக்குக் கட்டியம் கூறி நிற்கிறது. தீவினை என்ன நீத்து'' என்ற தொடர் பரதன் ''தள்ளிரிய பெருநீதித் தனியாறு புக மண்டும் பள்ளம்'' என்பதற்கு மேலும் ஒரு சான்றாக அமைகிறது. பரதனை நோக்கிக் குகன்,

''மன் புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்''

என மேலும் பாராட்டு மொழிகளைப் பகர்கின்றான்.

இலக்குவன், பரதனை உணராது வெகுண்ட போதும், பரதன் அவை ஒன்றும் அறியாது, இளவல் இலக்குவன் மேல் அளவற்ற அன்பே பூண்டு நிற்கிறான். குகனை நோக்கிப் பரதன், இராமன்



www.saivamonline.com

துயின்ற காலை, இலக்குவன் யாது செய்தான் என்று அவன் தொண்டினை அறிய வினவுகின்றான். குகன்,

''அல்லை ஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும்
வெய்து உயிர்ப் போடும் வீரன்
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்
கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்
இமைப்பிலன் நயனம் என்றான்''

குகன் சொற் கேட்ட பரதன் தன்னையும், இலக்குவனையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தன்னை நொந்து கொள்கிறான். நான் இராமனுக்கு நீங்காத துன்பம் தந்தேன். இலக்குவன் அத்துன்பத்தைத் துடைத்து நின்றான் என வருந்துகின்றான்.

''இராமனுக்கு இளையார் என்று
முன்பு ஒத்த தோற்றத்தோமில்
யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்
அவன் அது துடைக்க நின்றான்
அன்பத்துக்கு எல்லை உண்டோ
அழகிது என் அடிமை''

பரதனின் உயர் பண்பினை நிலை நாட்டும், அரிய களங்களில் ஒன்றாக இக்கூற்று அமைகிறது.

கங்கையைக் கடக்கும்போது பரதன், குகனுக்குத் தன் தாயர்களை அறிமுகம் செய்யும் இடத்தில் கம்பன், பரதன் என்ற பாத்திரத்தைப் பண்பின் உறைவிடமாக உயர்த்திக் காட்டுகின்றான். அவற்றின் திறம் விரிப்பின் பெருகும். வாழ்க்கை முழுவதையும் போர்க்களத்தில் நின்று, வீரம் காட்டும் ஒரு பாத்திரம் பரதன் அல்லன். நேரம் கிடைக்கும் போதெல்லாம், பழி துடைப்பதிலேயே தன்னை இனங்காட்ட வேண்டிய அவலம் அவனுடையது. அவன் தன்னை ஈன்ற கைகேயியை அறிமுகம் செய்யுமிடத்தில் சற்றே கடும் சொற்களைக் கையாள நேர்கிறது.





www.saivamonline.com

''படர் எலாம் படைத்தாளைப் பழி வளர்க்கும்
செவிலியைத் தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப் பாரம் குறைந்து தேய
உடர்எலாம் உயிர்இலா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல்
இந்நின்றாள் என்னை ஈன்றாள்''

ஆழமாகச் சிந்தித்தால், கைகேயி இழைத்த தீமைக்கு முன் பரதன் சொற்கள் குற்றமுடையனவாகத் தோன்றா. அவள் ஈன்றது என்னை, ஆனால், செவிலியாக வளர்த்தது பழியை என்ற மனக்குமுறலைக் கம்பன் பதிவு செய்கிறான்.

இராமனும் பரதனும் சந்தித்துக் கொண்டமையும், பரதன் வேண்டுகோளும், இராமன் மறுப்புரைகளும் தனி ஒரு பண்பாட்டு இலக்கியமாக இராமகாதையில் திகழ்வன. தயரதன் இறந்த துயரத்தை இராமனுக்கு முதன் முதல் தெரிவிக்கும் சோகமும் பரதனுக்கே வருகிறது. தந்தை மறைவு கேட்டுப்பலபட அவன் புலம்புகின்றான். வசிட்டன் தேறுதல் உரைகள் கூறுகின்றான். இராமன் தந்தைக்கு நீர்க்கடன்கள் ஆற்றித்தங்குமிடம் சேர்கிறான்.

மறுநாள் காலை, விரத வேடம் பூண்டதற்கான காரணத்தை இராமன் பரதனிடம் வினவுகின்றான் பரதன்,

''உந்தை தீமையும் உலகு உறாத நோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்க மீண்டு அரசு செய்க''

எனப் பணிந்து நாடாள நீ மீண்டும் வருக என அழைக்கிறான். பலவாறு உலகியல் கூறி, இராமன் நாடு திரும்ப மறுத்ததுப் பரதனிடம் தந்தை இட்ட கட்டளைப்படி, நாடு இனி உனக்கே உரியது; சென்று நீயே ஆள்க என்று பணிக்கிறான்.

''வரன் நில் உந்தை சொல் மரபினால் உடைத்
தரணி நின்னது என்று இயைந்த தன்மையால்
உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே ஆள்க''

என்ற இராமன் வார்த்தைகளைப் பற்றிக் கொண்ட அறிஞனான பரதன், நாடு எனக்குரியது என்பதை ஒரு வாதத்திற்காக



www.saivamonline.com

ஏற்றுக்கொண்டாலும், தற்போது நான் எனக்குரிய நாட்டாட்சியை நினக்கு வழங்குகின்றேன், உடன் நாடு திரும்பி நீ முடி சூடிக் கொண்டு ஆள்க, என்கிறான்.

> ''முன்னர் வந்து உதித்து உலகம் மூன்றிலும்
> நின்னை ஒப்பிலா நீ பிறந்த பார்
> என்னது ஆகில் யான் இன்று தந்தனென்
> மன்ன போந்து நீ மகுடம் சூடு''

அரசு கட்டிலுக்காகவும், ஆட்சி அதிகாரங்களுக்காகவும் தந்தை மகனைக் கொல்வதும் மகன் தந்தையைக் கொல்வதும் உடன் பிறந்தவர்களைப் பகைவனுக்குக் காட்டிக் கொடுப்பதும் என உலக வரலாறுகளில் படித்து வெறுத்த நம் மனத்திற்குப் பரதன் இராமன் பண்பாட்டு உறவு ஆறுதலாக அமைகிறது. இராமாயணம் காலத்தை வென்று வாழ்வதற்கான காரணக் கூறுகளில் இதுவும் ஒன்று என்று மனம் இனங்கண்டு மகிழ்கிறது.

பரதனினும் ஒரு படிமேலே போய் நாடாள மறுக்கும் இராமன் திறம் அவன் காப்பிய நாயகன் தகுதிக்குக் கட்டியம் கூறி நிற்கிறது.

> ''எந்தை ஏவ, ஆண்டு ஏழொடு ஏழ் எனா
> வந்த காலம் நான் வனத்துள் வைக நீ
> தந்த பாரகம் தன்னை மெய்ம்மையால்
> அந்த நாள் எலாம் ஆள் என் ஆணையால்''

நீ எனக்குத் தந்த நாட்டை ஏற்றுக் கொண்டு, நான் மீண்டும் உன்னிடம் வழங்குகின்றேன். என் ஆணையை ஏற்றுத் தந்தை கூறிய பதினான்கு ஆண்டுகள் நீ நாடாள்க எனப்பணிக்கிறான் இராமன். அன்பின் முடிச்சு மேலும் இறுக்கம் கொள்கிறது. ''வேண்டாமை அன்ன விழுச்செல்வம்'' என்ற குறள் நெறியும் வாழ்வு பெறுகிறது.

பரதன் ஒருவாறு மனம் தெளிகிறான். இராமன் பாதுகைகளை வேண்டிப் பெறுகிறான். பதினான்கு ஆண்டுகளில் நீ நாடு மீளாவிடில் தீப்புகுந்து மாய்வேன் என ஆணை சாற்றுகிறான். இராமன் திருவடிகளைத் தலைமேல் சுமந்து கொண்டு நாடு திரும்புகிறான். இராமன் பாதுகையை அரியணை ஏற்றி நந்தியம் பதி என்ற இடத்தில் மரவுரி தரித்த கோலத்தினனாய்



www.saivamonline.com

இராமன் வரவுக்காகப் பரதன் காத்திருப்பதாகக் கம்பன் கதையை நிறைவு செய்கிறான்.

இராமன் மரவுரி தறித்துக் காடு செல்லப் புறப்படும் முன், கோசலையைச் சென்று கண்டு வணங்கி விடைபெறுகிறான். கோசலை பெரிதும் வருந்தி,

''முறைமை அன்று என்பது ஒன்று உண்டு; மும்மையின்
நிறை குணத்தவன்; நின்னினும் நல்லனால்
குறைவு இலன்''

என்று ஒரு மதிப்பீட்டு உரை பகர்ந்தாள். அந்த உரை எத்துணை உண்மையானது என்பதைக் கம்பன் பரதனின் பாத்திரப் படைப்பில் ஆங்காங்கே ஒளியூட்டிக் காட்டுகின்றான்.

பெருங்காப்பியங்கள், காப்பியத் தலைவனுக்கு நிகரான இன்னொரு தலைவனை, ஒளியூட்டிக் காட்டா. இராமனே, இக்கதையின் தனிப்பெரும் நாயகன். பரதன் பாத்திரம் சில காண்டங்களில் மட்டுமே வரும் ஒரு துணைப் பாத்திரமே என்றாலும், கம்பன் பரதனை இராமனுக்கு நிகராகச் சில இடங்களில், அவனின் மேலான பாத்திரமாகவே படைத்துக்காட்டி மகிழ்கிறான்.

கம்பன் தமிழ் மண்ணிலிருந்து ஒரு கதைக் கருவைத் தேர்ந்து கொள்ளாது, இராமன் கதையைத் தேர்வு செய்ததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். தமிழ் மண்ணில் நெறி திறம்பிய தன்னிச்சையான வாழ்வை மேற்கொண்டு ஒழுகிய காமம் சார்ந்த ஆடவர் வாழ்க்கையை நெறிப்படுத்தி ஒருவனுக்கு ஒருத்தி என்ற உணர்வைத் தோற்றுவது ஒரு நோக்கம்.

இரண்டாவதாக நமது வீர இலக்கியங்கள் யாவும் ஒரு மொழி பேசிய தமிழர்கள் மொழி வழி ஒன்றுபடாது இனவழிப் பிரிந்து நின்று போரிட்டு மடிந்த அவலத்தை ஏந்தி நிற்பன. அதிலும் தாயாதிகளும், பங்காளிகளும் தந்தை மகன்களும் நாட்டாட்சிக்காகப் பகைத்துப் போராடிய அவலம் கம்பனை வெகுவாகப் பாதித்திருக்கவேண்டும்.

இந்த அவலத்திலிருந்து தமிழரசர்களை மீட்டு, அரச வாழ்வில் அன்பினை நிலை நாட்டப் பரதன் பாத்திரம் கம்பனுக்குப் புதையலாகத் தென்பட்டது. அதனை ஒளியூட்டும் முகத்தான் கம்பன் தமிழர் அரசவரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்திற்கு வழிகாட்டி நிற்கிறான்.

www.saivamonline.com